In the Court of the Assistant Sessions Judge, Srivaikundam
Case No : SC.228/2019
Deposition of P.W.4
****

Name திரு.சிவகுமார் காவல் உதவி ஆய்வாளர்

Father's Name

Village

Taluk

Calling

Age A1 Present, A2 and A3 absent, U/s.317 Petition filed and allowed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of March 2025.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் மதுவிலக்கு மற்றும் தடுப்பு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு திருவைகுண்டம் காவல் நிலையத்தில் பயிற்சி காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது கடந்த 09.10.2017ம் தேதி இரவு 10 மணியளவில் நானும் என்னுடன் தலைமைக்காவலர் 2198 திரு.முருகன் ஆகிய இருவரும் இரவு ரோந்து அலுவல் பணியில் இருந்த போது திருவைகுண்டம் பெரும்பத்து மூப்பனார் கோவில் தெருவிற்கு அருகே உள்ள திரு.ஆனந்த அம்மன் கோவில் அருகே நாங்கள் சென்றபோது வழக்கின் எதிரிகளான பரமசிவன், காசி என்ற குண்டு காசி, பாண்டி என்ற இசக்கி பாண்டி, ஆகிய மூவர்களும் மதுஅருந்திக்கொண்டு பொது மக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் செயல்பட்டு கொண்டிருந்தவர்களை நாங்கள் இருவரும் சென்று எச்சரித்து அங்கிருந்து செல்லும்படி அறிவுறுத்தினோம்.
2. அதற்கு மேற்படி எதிரிகள் மூன்றுபேரும் எங்களை பார்த்து போலிஸ்கார தேவிடியா மொவனே என்று ஆபாசமாக பேசி எதிரி பரமசிசன் முதுகுக்கு பின்னால் இருந்து ஒரு அருவாளை எடுத்து எங்களை நோக்கி நான் எவ்வளவு பெரிய ரௌடி தெரியுமா எங்களையே பிடிக்க வருகிறாயா கூதி மவனே புண்டாமவனே என்று ஆபாசமாக பேசி எங்களை மிரட்டினான் என்றும் உடனிருந்த மற்ற இரண்டு எதிரிகளான காசி என்ற குண்டு காசி, மற்றும் பாண்டி

என்ற இசக்கிபாண்டி ஆகிய இருவரும் என்னையும் தலைமைக்காவலர் முருகனையும் கீழே தள்ளிவிட்டார்கள், நான் நிலை தடுமாறி கீழே விழவும், மேற்படி எதிரிகள் இருவரும் இந்த போலிஸ்காரர்களை வெட்டி கொலை செய்தால் தான் நாம் நிம்மதியாக இருக்க முடியும் இவர்களை கொல்லு என்று கூறியவுடன் அருவாளை வைத்திருந்த எதிரி பரமசிவன் இத்தோடு சாவுல என்று கூறிக்கொண்டே எனது கழுத்தை நோக்கி வெட்டினான் நான் விலகிக்கொள்ளவே அந்த வெட்டு என்மீது படாமல் அருகில் இருந்த இருசக்கர வாகனத்தில் பட்டது என்மீது பட்டிருந்தால் நான் சம்பவ இடத்திலேயே இறந்திருப்பேன்.

3. உடனே சுதாரித்துக்கொண்ட நாங்கள் மேற்படி எதிரிகளை மடக்கி பிடிக்க முயன்ற போது எதிரி பரமசிவன் கையிலிருந்த அருவாளை மற்றொரு எதிரியான இசக்கி பாண்டி வாங்கி எங்களை நோக்கி சாவுங்கள போலிஸ்காரங்களா என்று கூறி வீசினான் நாங்கள் விலகிக்கொள்ளவே எங்கள் மீது படவில்லை. இந்த வழக்கு சம்பவம் அறிந்த திருவைகுண்டம் காவல்நிலையத்திலிருந்த பிற போலிஸார்கள் அங்கு வரவே எதிரிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். உடனே நான் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க திருவைகுண்டம் காவல்நிலையத்தில் ஒரு புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.5 ஆகும்.** இதுதொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போதுஎன்னிடம் காட்டப்படும் அருவாள்தான் எதிரி என்னை வெட்டுவதற்காக பயன்படுத்தி கொலை முயற்சி செய்த அருவாள். **அந்த அருவாள் சா.பொ.1 ஆகும்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. சம்பவம் நடந்த அன்று இரவு 10 மணிக்கு ரோந்து பணியில் நான் இருந்தேன், 9.50 மணிக்கு திருவைகுண்டம் பேருந்து நிறுத்தத்திலிருந்து ரோந்து பணி ஆரம்பித்தேன்.
2. சம்பவ நாளன்று எங்கெல்லாம் ரோந்து சென்றோம் என்று தற்போது எனக்கு நியாபகம் இல்லை.
3. சம்பவம் நடந்த இடம் வீடுகள் நிறைந்த பகுதி என்றால் வீடுகள் உண்டு

எவ்வளவு வீடுகள் என்று தற்போது எனக்கு நியாபகம் இல்லை.

4. மூப்பனார் தெருவானது கிழ மேல் பகுதியில் உள்ளது.
5. அந்த இடத்தில் நான் சொல்லியுள்ள கோவில் ரோட்டு மேல்தான் உள்ளது.
6. சம்பவமானது பஜாரில் உள்ள அனைவருக்கும் தெரியும்.
7. நான் கொடுத்த புகார் மனுவில் சம்பவ இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றும் அதை பார்த்தார்கள் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.
8. வழக்கின் மூன்று எதிரிகளும் பொது இடத்தில் மதுஅருந்தி பொது மக்களுக்கு இடையூறு செய்ததாக தனி நபர்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.
9. சம்பவ இடத்தில் உள்ள தெருவில் உள்ள மக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.
10. நான் தலைமைக்காவலரும் ஒரே வாகனத்தில் தான் சென்றோம்.
11. எனது தற்காப்பிற்கு துப்பாக்கி உண்டு என்றால் நான் பயிற்சி உதவி ஆய்வாளர் என்பதால் துப்பாக்கி எனக்கு கிடையாது.
12. நான் சொன்னவாறு எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.
13. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாததால் தான் பொது மக்கள் யாரும் புகார் அளிக்வில்லை என்றால் சரியல்ல.
14. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாததால் தான் அந்த தெரு மக்கள் யாரும் புகார் அளிக்வில்லை என்றால் சரியல்ல.
15. எதிரிகள் அருவாளை கொண்டு வெட்டும் போது அருகில் இருந்த பைக்கின் மீது பட்டது என்று சொல்லியுள்ளதில் பைக் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது.
16. சம்பவத்தில் சேதமடைந்த பைக்கின் உரிமையாளர் புகார் அளித்துள்ளாரா என்றால் என்னிடம் எதுவும் கொடுக்கவில்லை.
17. மேற்சொன்ன சேதமடைந்த பைக்கின் உரிமையாளர் யாருடையது என்று தெரிந்து கொள்ள நான் முயற்சி செய்யவில்லை என்றால் முயற்சி செய்தேன் ஆனால் எனக்கு உரிமையாளர் யாரென்று தெரியவில்லை.
18. உரிமை கோரப்படாத அந்த பைக்கை நான் காவல்நிலையத்திற்கு எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான்.
19. எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு காயம் எதுவும் ஏற்பட்டதா என்றால்

ஏற்படவில்லை.

20. எதிரிகள் மூன்று பேரும் என்னை வெட்ட முயற்சி செய்தததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

21. எதிரிகள் என்னை ஆபாசமான வார்த்தைகளால் பேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

22. நான் சம்பவத்தை எங்கள் காவல்நிலையத்திற்கு தெரியபடுத்தியவுடன் ஐந்து ஆறு நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்.

23. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்லல.

24. வழக்கானது புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்லல.

25. எதிரிகள் சம்பவ நாளன்று விட்டிலிருந்த எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்த காவல்நிலையத்தில் பிடியில் வைத்துக்கொண்டே ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த பொய்புகார் மனுவினை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

K NAMBIRAJAN

Digitally signed by K NAMBIRAJAN
Date: 2025.03.13 18:29:50 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**